# பொதுக்காலத்தின் பதிமூன்றாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**1அர 19:16,19-21, கலா 5:1,13-18, லூக்கா 9: 51-62**

## திருப்பலி முன்னுரை:

அழைக்கப்பட்டவர்களே, பொதுக்காலத்தின் பதிமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். இயேசுவின் அழைப்பை காலம் தாழ்த்தாமல் ஏற்க இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாத மக்களை, அவர் சினம் கொண்டு அழிப்பதில்லை என்றாலும் அவரை நம் இல்லத்தில் வரவேற்பது நம் கடமை. தலை சாய்க்கக்கூட இடமில்லாதவராக இயேசு இந்த உலகில் வாழ்ந்தார். தன்னைப் பின் பற்ற விரும்பும் ஒவ்வொருவரும், உலகப்பற்று இல்லாதவர்களாய் இருக்க வேண்டுமென ஆண்டவர் விரும்புகிறார். திரும்பிப் பார்க்காமல் கிறிஸ்துவைப் பின்தொடர்பவரே இறையாட்சிக்கு உட்பட முடியும் என்பதை உணர அழைக்கப்படுகிறோம். ஆண்டவரின் விருப்பத்துக்கு நம்மையே அர்ப்பணித்து வாழ வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# முதல் வாசகம்

எலிசா புறப்பட்டுப் போய், எலியாவுக்குப் பணிவிடை செய்தார்.

**அரசர்கள் முதல் நூலிலிருந்து வாசகம் 19: 16,19-21**

அந்நாள்களில் ஆண்டவர் எலியாவை நோக்கி, ஆபேல் மெகோலாவைச் சார்ந்த சாபாற்றின் மகன் எலிசாவை உனக்குப் பதிலாக இறைவாக்கினராக அருள்பொழிவு செய்“ என்றார். எலியா அங்கிருந்து சென்று, சாபாற்றின் மகன் எலிசாவைக் கண்டார். அப்பொழுது அவர் ஏர் பூட்டி உழுதுகொண்டிருந்தார். அவருக்கு முன்னே பதினோர் ஏர்கள் இருந்தன. பன்னிரண்டாம் ஏரைத் தாமே ஓட்டிக் கொண்டிருந்தார். எலியா அவரிடம் சென்று, தம் மேலாடையை அவர் மீது தூக்கிப் போட்டார். எலிசா அவரைக் கடந்து செல்கையில் ஏர் மாடுகளை விட்டுவிட்டு எலியாவிடம் ஓடிவந்து, நான் என் தாய் தந்தையிடம் விடைபெற்று வர அனுமதி தாரும். அதன் பின் உம்மைப் பின்செல்வேன் என்றார். அதற்கு அவர், சென்று வா, உனக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன்! என்றார். எலிசா எலியாவை விட்டுத் திரும்பி வந்து, ஏர் மாடுகளைப் பிடித்து, அடித்துத் தாம் உழுத கலப்பைக்கு நெருப்பு மூட்டி, அம்மாட்டு இறைச்சியைச் சமைத்து, மக்களுக்குப் பரிமாற, அவர்களும் அதை உண்டனர். பின்பு அவர் புறப்பட்டுப் போய் எலியாவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்யலானார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்

ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து.

**திருப்பாடல் 16: 1-2, 5. 7-8. 9-10. 11**

இறைவா, என்னைக் காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். நான் ஆண்டவரிடம் நீரே என் தலைவர்“ என்று சொன்னேன். ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து அவரே என் கிண்ணம் எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே. பல்லவி

எனக்கு அறிவுரை வழங்கும் ஆண்டவரைப் போற்றுகின்றேன் இரவில்கூட என் மனச்சான்று என்னை எச்சரிக்கின்றது. ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன் அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே, நான் அசைவுறேன். பல்லவி

என் இதயம் அக்களிக்கின்றது என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது என் உடலும் பாதுகாப்பில் நிலைத்திருக்கும். ஏனெனில், என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர் உம் அன்பனைப் படுகுழியைக் காணவிடமாட்டீர். பல்லவி

வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர் உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு. பல்லவி

## இரண்டாம் வாசகம்

உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

**திருத்தூதர் பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 5: 1,13-18**

சகோதரர் சகோதரிகளே, கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார் அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை எனும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள். அன்பர்களே, நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கு ஒருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள். ஹஹஉன்மீது நீ அன்புகூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக" என்னும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவு பெறுகிறது. ஆனால் நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள். எச்சரிக்கை! எனவே நான் சொல்கிறேன்: தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள் அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள். ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது. தூய ஆவியின் விருப்பம் ஊனியல்புக்கு முரணானது. இவை ஒன்றுக்கொன்று எதிராய் உள்ளதால் நீங்கள் செய்ய விரும்புவதை உங்களால் செய்ய முடிவதில்லை. நீங்கள் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டால் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கமாட்டீர்கள்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு

- இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா ! ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன். நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. அல்லேலூயா !

## நற்செய்தி வாசகம்

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 9: 51-62

அக்காலத்தில் இயேசு விண்ணேற்றம் அடையும் நாள் நெருங்கி வரவே, எருசலேமை நோக்கிச் செல்லத் தீர்மானித்து, தமக்கு முன் தூதர்களை அனுப்பினார். அவருக்கு இடம் ஏற்பாடு செய்வதற்காக அவர்கள் சமாரியருடைய ஓர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர் எருசலேம் செல்லும் நோக்கமாயிருந்ததால் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீடர்கள் யாக்கோபும் யோவானும் இதைக் கண்டு, ஆண்டவரே, வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா?" என்று கேட்டார்கள். அவர் அவர்கள் பக்கம் திரும்பி, அவர்களைக் கடிந்துகொண்டார். பின்பு அவர்கள் வேறோர் ஊருக்குச் சென்றார்கள். அவர்கள் வழி நடந்தபோது ஒருவர் அவரை நோக்கி, நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்" என்றார். இயேசு அவரிடம், நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை" என்றார். இயேசு மற்றொருவரை நோக்கி, ஹஹஎன்னைப் பின்பற்றி வாரும்" என்றார். அவர், முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அனுமதியும்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, இறந்தோரைப் பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்" என்றார். வேறொருவரும், ஐயா, உம்மைப் பின்பற்றுவேன் ஆயினும் முதலில் நான் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்" என்றார். இயேசு அவரை நோக்கி, கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்றார்.

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. பணியாற்ற அழைப்பவராம் இறைவா,**

உமது பணிக்காக நீர் தேர்ந்துகொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாய் வாழ்ந்து, உமது திருவுளத்தை இம்மண்ணில் நிறைவேற்ற துணை நிற்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. என்றென்றும் மாறாத பேரன்பு உடையவரான தந்தையே!**

நாங்கள் ஒவ்வொருவரும் கிறீஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட அழைத்தலை ஆழமாக உணர்ந்து திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைக்கவும்: தூயஆவியின் தூண்டுதலுக்கு ஏற்பவாழவும், தீமைகளை எம் வாழ்விலிருந்து அகற்றி நாங்கள் பெற்றுக் கொண்ட அழைப்பிற்கேற்ப பரமாணிக்கமாய் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. திக்கற்றவர் கூவியழைக்க, அவர்கள் குரலைக் கேட்கும் தந்தையே!**

இன்று அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்காகவும் கவலை, நோய், துன்பம் போன்றவற்றிலிருந்தும் விடுதலை பெறத்தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுதலைப் பெற்றுக் கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. வாழ்வு தருபவராம் இறைவா,**

உலகின் தீய வழிகாட்டுதலால் ஊனியல்பின் இச்சைகளுக்கு அடிமைகளாகி, உமது அன்பையும் பிறரது உறவையும் புறக்கணித்து வாழும் மக்கள், உமது அருளால் புதுவாழ்வு பெற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

உலகிலிருந்து தவறுகள் அகலவும், நோய்கள் நீங்கிப் பஞ்சம் ஒழியவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர் நலமாக நாடு திரும்பவும், நோயுற்றோர் நலம் பெறவும், இறக்கின்றவர் மீட்பின் நிறைவு பெறவும் வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை

இயேசு எதிர்பார்க்கும் கிறிஸ்தவன்

இப்பகுதியை வாசிக்கும் நமக்கு, நாம் கிறிஸ்தவர்களாக இருக்கும் ஆழத்தை அறிய வாய்ப்புகிடைக்கிறது. நம்மில் பலர், கிறிஸ்தவம் என்பது ஒரு வகையான மதிப்புக்குரிய வாழ்க்கை என்று நினைக்கிறோம். " நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்" என்று கிறிஸ்தவ வாழ்க்கையை, ஒருவித மெத்தனமான வாழ்கையாகக் கணிக்கிறோம்.அப்படி அல்ல என்று இயேசு இங்கே சுட்டிக் காட்டுகிறார். கிறிஸ்தவ வாழ்வு என்பது, தலை சாய்க்கவும் நேரமும், வாய்ப்பும் வசதியும் இல்லாத வாழ்க்கை. எனவேதான் மறை நூல் அறிஞரின் கோரிக்கையை நிராகரிக்கிறார் இயேசு.

பல சமயங்களில் நாம் இந்த இரண்டாவது மனிதனைப்போல நம் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழுகிறோம். ஓரளவு சரி. ஆனாலும் இன்னும் முன்னேற வேண்டியுள்ளது.அவனது கோரிக்கை ஓரளவு சரி. ஏனென்றால், தன் தந்தையை அடக்கம் செய்து விட்டுவர அவன் அனுமதி கேட்டது, தாய் தந்தைக்குரிய கடமையை நிறைவேற்றும் செயலாகும்.எலியா இறை வாக்கினர், எலிசா இறைவாக்கினரை அழைத்தபோது, "நான் என் தாய் தந்தையிடம் விடைபெற்று வர அனுமதி தாரும். அதன்பின் உம்மைப் பின்செல்வேன்" என்றார். அதற்கு அவர், "சென்று வா, உனக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன்!" என்றார்.( 1 அர 19:20)

இந்த இரண்டாவது மனிதரை மறுக்கவில்லை. ஆயினும் கிறிஸ்தவ வாழ்வு என்பது குடும்பம்,சுற்றம் என்ற சிறிய வட்டத்தைத் தாண்டி, சமூகத்தைப் பற்றிப் படர்ந்ததாகி, உலகளாவியதாக இருக்க வேண்டும் என்பது இயேசுவின் எதிர்பார்ப்பு. இதுவே கிறிஸ்தவன் என்னும் உண்மைச் சீடனிடம் இன்றும் இயேசு விரும்புவது.

**மன்றாட்டு:**

இறை வார்த்தையில் புதுப்பிக்கப்பட்டு புதுவாழ்வு வாழ எங்களுக்கு அருள்தாரும். ஆமென்.